நல்லூர் பிரதேச நூலகம்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 28 வியாழக்கிழமை (12 08 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 257

# கிளாலிக் கடலில் படகு விபத்து 17க்கும் அதிகமானோர் பலி!

## பலியானவர்களில் ஐவர் ஒரே குடும்பத்தவர்கள்

தென்மராட்சி, ஆக. 12

கிளாலியில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தவர்களில் ஐவர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி (வயது 38), அவரது மனைவி மனோராணி (வயது 36), அவர்களது 7 வயதுப் பெண் குழந்தை துஷீபா மற்றும் ஒன்றரை வயது நிரம்பிய இரட்டைப் பெண் குழந்தைகள் துவேகா, துளசி ஆகியோர் ஆவர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 15 சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 12

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்த 17 சடலங்களில் 15 சடலங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை அடையாளம் காணப்பட்டன.

அடையாளம் காணப்பட்ட சடலங்களின் விவரம் வருமாறு:-

காரைநகரைச் சேர்ந்தவரும் கடைசியாக அராலியில் வசித்தவருமான சிவகடாட்சம் சபா நடேசன்,

நெல்லியடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தங்கம்மா (வயது 59) இராகவன் கமலாதேவி (வயது 52) ஆகிய இரு சகோ

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்களை தேடும் முயற்சி நேற்றும் தொடர்ந்தது

தென்மராட்சி, ஆக. 12

கிளாலிக் கடலில் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தேடும் பணி நேற்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு கிளாலிப் படகுச் சேவையைப் பயன்படுத்தியவர்களின் உறவினர்கள் கிளாலிக் கடற்கரையில் நேற்று பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டனர். தமது உறவினர்களின் கதி தெரியாது பலர் ஏங்கியவாறு அழுத வண்ணம் இருந்தனர்.

(இ-117)

## சடலங்களை அடையாளம் காண மக்கள் முண்டியடிப்பு

### ஆஸ்பத்திரியில் ஒரே சோகமயம்

கிளாலிக் கடலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த போது அவற்றை அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதியில் நூற்றுக் கணக்கான பொது மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2-30 மணி அளவில் 17 சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறைக்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

சடலங்களை அடையாளம் காண வந்தவர்களில் பலர் அழுது புலம்பிக் கொண்டிருந்தனர்.

இக்கரையிலிருந்து சென்ற படகுகளே கடலில் மூழ்கின

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கடும் காற்றினால் பல படகுகள் திரும்பி வந்தன

தென்மராட்சி, ஆக. 12

நேற்று முன்தினம் இரவு கிளாலியில் இருந்து பூநகரி நோக்கிப் புறப்பட்ட படகுகளில் பலவும் காற்றினால் மீண்டும் திரும்பி கிளாலிக் கரையை வந்து சேர்ந்தன.

காற்றில் சிக்கிய சில படகுகள் இயந்திரக் கோளாறுக்கும் உள்ளாகின.

கடும் காற்றினால் படகுகள் கவிழ்ந்து அதில் இருந்தவர்கள் கடலில் தத்தளித்த போது பலர் கடற்புலிகளினாலும் படகோட்டிகளினாலும் காப்பாற்றப்பட்டனர். (இ 117)

## கடும் காற்றால் படகுகள் கவிழ்ந்தன

யாழ்ப்பாணம், ஆக. 12

கிளாலிக் கடலில் செவ்வாய் இரவு ஏற்பட்ட படகு விபத்தில் 17க்கும் அதிகமான பயணிகள் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். கடும் காற்றினால் எழுந்த அலையினால் இரண்டு படகுகள் நீர் நிறைந்து தலைகீழாகக் கவிழ்ந்தன. அவற்றில் பயணம் செய்த 38 பேரில் 17 பேரின் சடலங்கள் நேற்றுப் பிற்பகல் வரை மீட்கப்பட்டன.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவரும், யாழ்ப்பாணம் மடத்தடியைச் சேர்ந்த குழந்தை ஒன்றும் காணாமற்போய் இருப்பதால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கிளாலிக் கரையில் இருந்து இரவு 7.30 மணியளவில் புறப்பட்ட படகுகளில் இரண்டே கடலில் மூழ்கி உள்ளன.

ஒருபடகு இரவு 11 00 மணி அளவில் கடும் காற்றில் சிக்கி இயந்திரக் கோளாறு காரணமாக நீரில் தத்தளித்துக் கவிழ்ந்தது. இந்தப் படகில் இருந்தவர்களில் நால்வரைத் தவிர ஏனையோர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீர் பெருமளவு நிறைந்து படகு தலைகீழாகக் கவிழ்ந்தது

### மனைவியை இழந்து நீந்தித் தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 12

படகு கவிழும் போது பெண்களும், குழந்தைகளும் அவலக் குரல் எழுப்பினர். அவர்களது மரண ஓலம் (இரண்டு விநாடிகளில்) படகு கவிழும் போது அடங்கியது. படகு கவிழ்வதை உணர்ந்த நான் கடலில் பாய்ந்து நீந்தினேன். படகு புரண்டு கிடப்பதைக் கண்டு நீந்திச் சென்று அதன் மேல் ஏறிக் கொண்டேன்.

நீந்தத் தெரிந்த நான் எனது மனைவி மூழ்கிய இடம் குறிப்பாகத் தெரியாததால் அவரை காப்பாற்ற முடியாத பாவியானேன். நான் என்ன செய்வேன். உயிரோடு கூட்டிக் கொண்டு சென்ற என் மனைவியை சடலமாக ஆஸ்பத்திரியில் காண வேண்டியதாயிற்று.

இவ்வாறு கண்ணீரும் கம்பலையுமாக தேம்பித் தேம்பி அழுதவாறு கூறினார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராமசாமி நடனசிகாமணி (67 வயது).

இவர் பரந்தனில் உள்ள தமது வயல்களைப் பார்ப்பதற்காக அங்கும் பின்னர் கொழும்புக்கும் செல்லுமுகமாக படகுப் பயணத்தை மேற்கொண்டவர்.

படகு விபத்துக் குறித்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கடலுக்குள் நேர்ந்த அனுபவம்; மூழ்கிய போது வியர்த்துக் கொட்டியது

### தப்பிய பெண் பேட்டி

யாழ்ப்பாணம், ஆக. 12

எமது படகிற்குள் நீர் நிறைந்து அது கவிழ்ந்து கொண்டிருந்த வேளை, எனது அருகில் இருந்த எனது உறவினரின் கையைப் பற்றிக் கொண்டேன்.

எனக்கும் நீந்தத் தெரியாது; எனது உறவினருக்கும் நீந்தத் தெரியாது. படகு கவிழ்ந்ததும் கடலில் மூழ்கிய நாம் கடல் அலையில் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தோம்.

கடலில் அலைக்கழிக்கப்பட்ட வேளை நான் மரணத்தை அனுபவித்துக் கொண்டேன். நினைவுகள் சுழன்றன. உறவினர்களை நினைத்துக் கொண்டேன். கடலுக்குள்ளும் வியர்த்துக் கொட்டியது. அது மரண வியர்வையாக இருக்கலாம்.

உயிர் பிரியப் போகின்றது என்ற ஒரே உணர்வுடன் என் குல தெய்வமான பண்ணாகம் விசவர்த்தனை முருகனை நினைத்து "முருகா, முருகா" என்று மட்டும் கத்திக்கொண்டிருந்தேன். சுமார் பதினைந்து நிமிட நேரமாகக் கத்திக் கொண்டிருந்த வேளை வேறு பலரின் கூக்குரல்களும் எனக்குக் கேட்டன.

முருகனே நேரில் வந்தது போல, படகு ஒன்று எமக்கு அருகில் வந்து எம்மைத் தூக்கிப் படகில் ஏற்றினர். நான் கைபற்றி இருந்தவர் படகில் ஏற்றப்பட்ட வேளை மயங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளை விடுவிக்க கோரி கொழும்பில் மறியல் போர்

யாழ்ப்பாணத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை அரசு விடுவிக்கவேண்டும் எனக் கோரி நேற்றுக் காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலும் பௌத்த இளைஞர் மத்திய நிலையத்துக்கு அருகாமையிலும் மறியல் போராட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் குடும்பத்தவர்களும் உறவினர்களும் இந்த மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

காலை 9-00 மணிக்கு கோட்டை ரயில் நிலையம் முன்பாகவும்— 10-00 மணிக்கு பௌத்த இளைஞர் மத்திய நிலையத்துக்கு அருகாமையிலும் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு கலதாரி ஹோட்டல் லிட்டன் சதுக்கத்துக்குச் சமீபமாகவும் மறியல் போராட்டம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சடலங்களை,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற செய்தி அறிந்து, குடாநாட்டில் இருந்து பயணம் புறப்பட்டவர்களின் உறவினர்கள் ஏக்கத்துடன் ஆஸ்பத்திரியில் திரண்டனர்.

இறந்தவர்களில் தங்கள் உறவினரும் இருப்பாரோ என்ற ஏக்கத்துடன் விவரம் அறிவதற்காக மக்கள் முண்டியடித்தனர். எல்லோரும் ஏக்கமும் சோகமும் கலந்த முகங்களுடன் காணப்பட்டனர். யாழ் ஆஸ்பத்திரியில் அழுகையும் கூக்குரலுமாக இருந்தது எங்கும் சோகமயமாகக் காணப்பட்டது.

(இ-9-5-15-162)


## தாழம்பூ

இந்நிறுவனத்தில் கணக்கு உதவியாளர், விற்பனையாளர் தரங்களுக்கு வேலை ஆட்கள் தேவை. விண்ணப்பதாரிகள் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன், எதிர்பார்க்கும் வேதனத்தைக் குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பப்படிவங்களை தபால் மூலம் மாத்திரம் அனுப்பி வைக்கவும்.

முகவரி:-

தாமரை (கிழக்கு).
447, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

குறிப்பு:-

எனது உறவினர்கள், நண்பர்கள், இந்நிறுவன ஊழியர்கள் / முன்நாள் ஊழியர்கள் ஆகியோரது விண்ணப்பங்கள் அல்லது அவர்களது சிபார்சுகளுடன் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ராஜன்,
14, குமாரசுவாமி வீதி,
யாழ்ப்பாணம்.

(6411)



## தேவை

### மருந்து விற்பனையாளர் (பயிலுநர்)

தகுதி: ஜி. சி. ஈ (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி ஆங்கில பாடத்தில் சித்தி அவசியம்.

வயது: 20 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ வடமராட்சி தெற்கு, மேற்குப் பகுதிகளிலிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

முகாமையாளர்,
மருந்து, பால்மா வகைகள் (தனியார்)
வரையுள்ளது
இல. 484 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(26905)


## நீக்கி வாசிக்கவும்

நேற்றைய உதயனில் வெளியான —

வில்லியம்ஹாவே தனியார் மருத்துவமனை வெற்றிடங்கள் குறித்த, ''தேவை'' என்ற விளம்பரத்தில் —

வடமராட்சி தெற்குப்பகுதியிலிருந்தும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன —

என்ற வசனம் இடம்மாறித் தவறுதலாகச் சேர்க்கப்பட்டுவிட்டது.

அதனை நீக்கி வாசிக்கவும்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12 — 08 — 1934

உதிர்வு: 24 — 07 — 1992

### செல்வி இ. நல்லநாயகியம்மை

(இளைப்பாறிய ஆசிரியை கரவெட்டி - கிழக்கு)

திதி: 12 - 08 - 1993

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

செல்வி சோ. ஆதி
பெறாமகள்
யாழ். பல்கலைக்கழகம்.
2 ஆம் வருடம்

(6413)

## தண்ணீர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று முன்தினம் இரவு சுமார் 7-30 மணிக்கு குழந்தைகள், பெண்கள் உட்பட 20 பேருடன் கிளாலிக் கரையில் இருந்து எமது படகு புறப்பட்டது. இரவு 11 மணியளவில் நடுக்கடலைத் தாண்டி சென்று கொண்டிருந்த வேளை படகு திடீரென இயந்திரக் கோளாறு காரணமாக இயங்க மறுத்தது அவ்வேளை படகோட்டிகள் அதனைப் பழுது பார்த்து ஓட வைத்தனர். ஐந்து நிமிட நேரத்தில் மீண்டும் இயந்திரம் பழுதடைந்தது. அவ்வேளை கடும் காற்றின் அலையின் வேகத்தால் படகிற்குள் நீர் நிறையத் தொடங்கியது.

### கவிழ்ந்து புரண்டது

படகில் நிறைந்த நீரை வெளியேற்ற வாளியோ, பாத்திரமோ எதுவுமின்றி உடைந்த போத்தல் ஒன்றினால் அள்ளி வெளியே ஊற்றிக் கொண்டிருந்தனர்.

கடல் அலையின் அலைக்கழிப்பில் நீர் பெருவாரியாக நிறைந்தது. படகு சரிந்து கவிழ்ந்தது. அப்போது பெண்களும் குழந்தைகளும் அவலக் குரல் எழுப்பினர். இரண்டு வினாடிகள் மட்டுமே அவர்களின் மரண ஓலம் கேட்டது. படகு தலைகீழாகக் கவிழ்வதை உணர்ந்து நான் அதிலிருந்து கடலில் பாய்ந்தேன். என்னுடன் வந்த எனது மனைவிக்கு என்ன நேர்ந்ததோ என்ற ஏக்கத்துடன் தனிமையாக நீந்தி புரண்டு கிடந்த எமது படகின் மேல் ஏறி இருந்தேன். அவ்வேளை மேலும் மூவர் [ஆண்கள்] நீந்தி வந்து என்னுடன் படகின் மேல் ஏறி அமர்ந்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் கிளாலிக்கரையில் இருந்துவந்த ஒருபடகைக் கூவி அழைத்தோம். அப்படகுக்காரருக்குக் கேட்கவில்லையோ, என்னவோ, அவர்கள் எங்கள் பக்கம் வராது ஆலங்கேணிப் பக்கமாய்ச்சென்றனர்.

### ஆலங்கேணியை அடைந்தோம்

சிறிதுநேரத்தில் அதேபோல வந்த மற்றொரு படகைக் கூவி அழைத்தபோது அவர்கள் எமக்கருகில் வந்து எங்கள் நால்வரையும் தமது படகில் ஏற்றிக்கொண்டு ஆலங்கேணிக் கரைக்குச் சென்றனர் — அதிகாலை 3 மணியளவில் ஆலங்கேணி சென்றடைந்த நாம் மீண்டும் கிளாலிநோக்கி புறப்பட்ட ஒரு படகுமூலம் கிளாலிக் கரைக்கு வந்துசேர்ந்தோம்.

சடலங்கள் ஒதுங்கி யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டதை அறிந்து நான் அங்கு சென்று இறந்த என் மனைவியின் சடலத்தைப் பெற்றேன்.

என்னுடன் சேர்ந்து வந்த எனது மனைவியை இழந்து அவரின் சடலத்தையே எடுத்துப் போகிறேன் — என்று தேம்பித் தேம்பி அழுதவாறு தெரிவித்தார்.

(அ-15)

## பலியானவர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த 5பேரின் சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் அடையாளம் காணப்பட்ட பின்னர் 5 பிரேதப் பெட்டிகளில் வைக்கப்பட்டு வாகனம் ஒன்றில் சாவகச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இவர்களுக்கு கொழும்பில் கடை இருப்பதாகவும் —

கடந்த மாதம் கொழும்பில் இருந்த வந்து உறவினர் வீட்டில் இவர்கள் தங்கி இருந்துவிட்டு மீண்டும் கொழும்பு திரும்புகையில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.


## Computer Programming in BASIC Language

4 MONTHS

திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: 18 - 08 - 1993

8 30 மணி

Lectures by:

S. P. SIVAPATHASUNDARAM,
M. I. D. P. M. (London)

★ முதல் அறிமுக வகுப்பு இலவசம்
★ கட்டணம் தவணை முறையில் மாதம்- ரூ 400/- மட்டுமே.
★ Basic கற்கும் மாணவர்களுக்கு Lotus, Word star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd Cross Street, Jaffna.

(சி-5663)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாறுவதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

திருமதி பாறுவதிப்பிள்ளை 11-08-1993 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், துரைசிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற திருவதி த. இந்திரா, திருமதி ஜெயசோதி விநாயகலிங்கம் (லண்டன்), சுந்தரலிங்கம் (காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை), பத்மநாதன் (லண்டன்), திருமதி இராசலட்சுமி யோகானந்தன், புஷ்பலிங்கம் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சறோஜினி துரைசிங்கம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), விநாயகலிங்கம் (லண்டன்), திருமதி சறோஜினி சுந்தரலிங்கம் (யாழ் மாநகரசபை), திருமதி ஜெனி பத்மநாதன் (லண்டன்), பொ. யோகானந்தன் [மகாவலி அபிவிருத்திச் சபை பொலநறுவை), திருமதி திலகா புஷ்பலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (12 - 08 - 1993) காலை 9 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. சுந்தரலிங்கம்.
(மகன்)

51/2 புங்கன்குளம் வீதி,
அரியாலை.

(26908)

### திருமதி வ. இ. நடனசிகாமணி இரத்தினேஸ்வரி

வ. இ நடனசிகாமணி இரத்தினேஸ்வரி கிளாலிக் கடலில் அகால மரணமானார் இவர் வ. இ நடனசிகாமணியின் (மணி அண்ணை - R. V. G.) அன்பு மனைவியும், மாவீரன் கப்டன் அலன் (பாக்கியலிங்கம்), காசிலிங்கம், நடராஜலிங்கம், சந்திரலிங்கம், சண்முகலிங்கம் விஷயலிங்கம், கலாராணி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. இ. நடனசிகாமணி
(கணவர்)

பாக்கியலிங்கம் வீதி,
வல்வெட்டித்துறை.

(26910)

### தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம்

அச்செழுவைச் சேர்ந்த தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம் பொலன்னறுவையில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும், சிவகௌரி, சிவராணி [உயர்தர மாணவிகள் வேம்படி மகளிர் கல்லூரி, ஆகியோரின் தந்தையும், திருமதி காந்திமதி செல்லத்துரை, திரு. சிதம்பரப்பிள்ளை' திருமதி மாகலஷ்மி, திரு சுந்தரமூர்த்தி, திரு சின்னப்பு ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சி. சிவகௌரி, சி. சிவராணி.
(பிள்ளைகள்)

''அயோத்தி''
அச்செழு,
நீர்வேலி.

(26912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் துணை

ஏழாலை தெற்கு - வசந்தபுரம் - களபாவோடை

# ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன்

## தேவஸ்தானம்

## ஏகவிம்சதின இலட்சார்ச்சனை

(21 தினங்கள்)



## பூர்த்திப் பெருவிழா இன்று

12 – 08 – 1993

திருவருளும், குருவருளும் பெருகி விளங்குகின்ற
வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில்
1993ஆம் ஆண்டுக்கான இலட்சார்ச்சனைப் பூர்த்திப் பெருவிழா 12-08-1993 இன்று
வெகுவிமரிசையாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மனின் திருவருள் கைகூடியுள்ளது.
பொதுமக்களின் உபயமாக
சிவஸ்ரீ. தி. கெங்காதரக்குருக்கள் அவர்கள் தலைமையில் பக்திவிழா நிகழும்.
23 - 07 - 1993 முதல் தினமும்
'அருள்மொழிச் செல்வர்', 'சொற்போழி', செந்தமிழ்ச் செம்மல்'
வாகீச கலாநிதி கனகசபாபதி - நாகேஸ்வரன் எம். ஏ.
(பரம்பரை அறங்காவலர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம், நயினாதீவு)
அவர்கள் தலைமையில் சிவத்தமிழ்றிஞர்கள், பண்ணிசை விற்பன்னர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,
அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் • ஆகியோரின் தெய்வீகப் பேருரைகள், பஜனைகள் இடம்பெறுகின்றன.
தற்பொழுது 'செஞ்சொற்சீராளன்', 'தமிழருவி', 'கந்தநிதி', 'சொல்மொழிவேந்தன்', 'செந்தமிழ்க் கொண்டல்'
த. சிவகுமாரன் (அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)
அவர்களின் தொடர் தெய்வீகப் பேருரை நடைபெறுகின்றது.
தினமும் வலி-வடக்குப் பிரிவு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பிரதேச ஆணையாளர்
திரு. க. அருந்தவராஜா
அவர்கள் தலைமையில் ஒழுக்காற்றுச் செயல்முறைப் போதனைகள் நிகழுகின்றன.
பக்திப் பேரெழுச்சிமிகு பூர்த்திப் பெருவிழாவிலன்று
● விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகள் ● பண்ணிசை அரங்கு ● பஜனை ● காவடி
● தெய்வீகப் பேருரை ● அன்னதானம் என்பன இடம்பெறும்

### ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நிகழவுள்ள இலவச சேவைகள்

★ சிறுவர் இலவசக் கல்வியும் சிறுவர் பராமரிப்பும்
★ வயோதிபர் பராமரிப்பும், உதவி வழங்கலும்
★ ஊனமுற்றவர்களுக்கான உதவி வழங்குதல்.
★ கண் பார்வை இழந்தவர்களுக்கான உதவி வழங்கல்.
★ இலவச வைத்திய சேவை நிலையம் [வசதி குறைந்தவர்களுக்கானது]
★ மாபெரும் விளையாட்டுப் போட்டி.
★ சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை முதலுதவிப் பயிற்சி. களபாவோடை வசந்தபுரம வாழ் சகலருக்கும் அளித்தல். (சான்றிதழ் வழங்கப்படும்)
★ சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையில் 35 தாதிகள் – 35 ஆண்கள் படையில் சேர்த்துக் கொள்ளல்.
★ வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன ஆலயச் சுற்றாடலில் வாழ் மக்களுக்கெனச் சுகாதார வாரம் (1கிழமை) பிரகடனப்படுத்தி, கருத்தரங்கு, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி நடத்துதல் (கீழ், மத்திய, மேற் பிரிவு • சான்றிதழ் வழங்கப்படும்)
★ இலவச பண்ணிசைப் பயிற்சி வகுப்புகள்.
★ பஞ்சபுராணம் ஓதுதற் பயிற்சி.
★ சமய அறிவுப் போட்டிகள்.
★ க. பொ. த. [சா/த], [உ/த] இலவச தமிழ், சமயபாட வகுப்புகள்.
★ தெய்வீக மகாநாடுகள்; இன்னும் பிற.

### அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வண்ணம்:
ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.
வசந்தபுரம்,
ஏழாலை தெற்கு, ஏழாலை.
10-08-1993

(கி/5578)


## வடக்கு - கிழக்கில் கடமையாற்றினால் மட்டுமே பொலீசாருக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஆக. 12

வடக்கு - கிழக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் ஆகக் குறைந்தது ஆறுமாத காலமாவது கடமையாற்றியவர்களுக்கு மட்டுமே இனிமேல் பதவி உயர்வு வழங்கப் படவிருக்கிறது.

இந்த நடைமுறையை கண்டிப்பாக அமுல் செய்வது என பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடமையாற்றாத பொலிஸ் உத்தியோகத்தர்களை பதவி உயர்வுக்கு சிபார்சு செய்யக்கூடாது என்று பிராந்திய, பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ-3)

## பட்டமளித்து கௌரவிப்பு

கொழும்புத்துறை, ஆக. 12

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளியம்மன் தேவஸ்தானத்தில் பத்துத் தினங்கள் தொடர் பாரத இலக்கிய விரிவுரையாற்றிய கவிஞர் க. நாகேஸ்வரன் அவர்களுக்கு மேற்படி தேவஸ்தானம் ''இலக்கிய செம்மல்'' என்ற பட்டமளித்தும் பொன்னாடை போர்த்தும் கௌரவித்தது. (க-30)

## தமிழ் இளைஞரைப் பிடித்து பொலீஸில் ஒப்படைத்தனர்

### பாணந்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரை பாணந்துறை ஹெஹல்வத்தை என்னுமிடத்தில் வைத்து பொதுமக்கள் சிலர் பிடித்து பாணந்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அடையாளம் காணப்படாத அந்த நபர் பாணந்துறை நீதிவான் பி. ஏ. ரி. ரத்னா நாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

விசாரணை முடியும் வரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒன்றரை மாத பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் மொத்தமாகவும், இல்லறை யாகவும் விற்பனைக்குண்டு. இல. 1010/9, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26895)

## மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 6-8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

## வெளிவந்துவிட்டது

பிரார்த்தனை - மாலை (தோத்திரத்திரட்டு) ஆக்கம்: ஆத்மஜோதி முத்தையா. வெளியீடு: மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கிடைக்குமிடம்: ஸ்ரீகாந்தா புத்தகசாலை நல்லூர், மக்மிலன் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. (சி-5659)

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப்பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-5658)

## தேவை

யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்ட ஒருதனியார் மருத்துவமனைக்கு பகல் முழு நேரக் கடமை செய்யக்கூடிய டாக்டர் (MBBS) ஆண்/பெண் ஒருவர் தேவை. ஓய்வு பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். 551, C/o உதயன் யாழ்ப்பாணம். (26804)

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு வேலைகளுக்கு பெண் உதவியாளர் தேவை. புதன், வெள்ளிக்கிழமைகளில் நேரில் தொடர்புகொள்ளவும்: மங்களபதி வைத்திய சாலை, இல. 41/5 அரச வீதி, நல்லூர். (26877)

## காணவில்லை

கோயில் குத்துவிளக்கின் ஒரு பகுதி, பித்தளையால் செய்யப்பட்டது. ஏறக்குறைய 3 அங்குல நீளமான உருண்டை வடிவமானது. சாவகச்சேரி கல்வயல் வீதி வழியாக சங்கத்தானை சப்பச்சிமாவடிக்குச் செல்லும் பாதையில் 10-8-93 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து செ. பரமானந்தக் குருக்கள் கல்வயல் சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். (26898)

## சுவிஸில் இந்து மாநாடு

சூறிச் ஆக. 12

ஜூலை 24ஆம், 25 ஆம் திகதிகளில் உலக இந்து தமிழ் கலாசார மாநாடு ஒன்றை சுவிஸ் இந்து மாமன்றம் நடத்தியது. ஐரோப்பாவில் முதன் முதல் நடைபெற்ற இந்து தமிழ் கலாசார மாநாடு இது வாகும்.

குன்னக்குடி வைத்தியநாதனின் இன்னிசை, கவியரங்கு, "ஈழத்தில் இந்து சமயம்" எனும் பொருளில் சொற்பொழிவுகள், ஆன்மீக உரைகள், கதாகாலட்சேபம் முதலிய நிகழ்ச்சிகள் மாநாட்டில் இடம்பெற்றன. (க)

## சேவை பாராட்டு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவின் உறுப்பினர் திரு வி. மோகன் அவர்களின் நீண்ட கால சேவையைப் பாராட்டி கடந்த 8ஆம் திகதி அவருக்குத் தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டது. (க-30)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 11
2. *தற்காலிக உதவி விரிவுரையாளர்:
   - கிறிஸ்தவ நாகரிகம்
   - நாடகமும் அரங்கக்கலைகளும்
   - நுண்கலை
   - பொருளியல்
   - அரசறிவியல்
   - மெய்யியல்
   - இந்து நாகரிகம்
   - சமஸ்கிருதம்
   - தமிழ்
   - ஆங்கிலம்
   - வியாபார நிருவாகம்
   - வர்த்தகம்
   - சித்தமருத்துவம்
   - ஆற்றுகைக்கலை — கர்நாடக சங்கீதம்/வாய்ப்பாட்டு
   - ஆற்றுகைக்கலை — கர்நாடக சங்கீதம் / வாத்தியங்கள்- வீணை / வயலின் / மிருதங்கம்
   - ஆற்றுகைக்கலை — கர்நாடக சங்கீதம் / பண்ணிசை
   - ஆற்றுகைக்கலை — (நடனம்) பரதநாட்டியம்.

   *"தேவையான பட்டப் பின் படிப்புத் தகைமைகளை கொண்டுள்ளவர்கள் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு பரிசீலிக்கப்படுவர்"
3. தற்காலிக கட்டுரை ஆசிரியர்—
   - வரலாறு
   - புவியியல்
4. தற்காலிக செய்முறை காட்டுநர் சித்தமருத்துவம்
5. தற்காலிக போதனாசிரியர்—
   - ஆங்கிலம் தரம் 11
   - பரதநாட்டியம்
   - மிருதங்கம்
   - கர்நாடக சங்கீதம்—வாய்ப்பாட்டு
   - வீணை
6. இடைவரவு விரிவுரையாளர் —
   - வர்த்தகைத்தொழிற் சட்டம் / சட்டச்சூழல் கணக்கியல் / கணக்காய்வு/வரிவிதிப்பு/வங்கியியல் சமூகவியல்/அரசறிவியல்
   - நாடகமும் அரங்குக் கலைகளும்— அரங்க வரலாறு/தயாரிப்பு முறை/நடிப்புக் கொள்கை / இந்திய அரங்கு ஆகியன கற்பித்தற்கு
   - சித்தமருத்துவம் — உயர்நிலைத் தமிழ் கற்பித்தற்கு கட்டடக்கலை /சிற்பக்கலை/ஓவியம் தீட்டுதல் அரங்குக்கான ஆக்க இசை, இசைத் தயாரிப்புகள்
   - தொலை நுகர்வு
   - பிரான்சிய மொழி
   - சமஸ்கிருதம்
   - மெய்யியல் — சமூக உளவியல்/கிரேக்க, மத்தியகால மெய்யியல் ஆகியன கற்பித்தற்கு
   - தொடர்புப் [illegible] கிறிஸ்தவ நாகரிகம்— பழைய ஏற்பாட்டியல்/புதிய ஏற்பாட்டியல் இலங்கை திருச்சபை வரலாறு / கிறிஸ்தவ மெய்யியல் / கிறிஸ்தவ வழிபாட்டியல் ஆகியன கற்பித்தற்கு
7. இடைவரவுப் போதனாசிரியர் —
   - கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு) / பண்ணிசை / வயலின்/ வீணை

**சம்பள அளவுத்திட்டம்:**

ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 11—

ரூபா 4,550—10X180 —5,850/- மாதமொன்றுக்கு

தற்போதைய சம்பளப் படி:

ரூபா 4025/- (மாதமொன்றுக்கு)

இத்துடன் ஒவ்வொரு வருக்கும் ஆண்டுக்கு 10,000/- ரூபா புத்தகப்படி செலுத்தப்படும்.

இப்படியான ஒவ்வொரு காலாண்டில் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப்பணமாகச் செலுத்தப்படும்.

1994-01-01 தொடக்கம் செலுத்தப்படும் படி ஆண்டுக்கு 10,000/- ரூபாவும் அத்துடன் ஆண்டுச் சம்பளத்தினதும் நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான படியினதும் 10 சதவீதமாகும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர் —

1993-12 31 ஆம் திகதி வரை ரூபா 4,485/- (நிலையானது) மாதமொன்றுக்கு

1994 - 01 - 01 இல் இருந்து ரூபா 5,070/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக போதனாசிரியர் தரம் 11 —

(ஆங்கிலம்)

1993-12-31 ஆம் திகதி வரை ரூபா 4,025/- (நிலையானது) மாதமொன்றுக்கு

1994 - 01 - 01 இல் இருந்து ரூபா 4,550/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக கட்டுரை ஆசிரியர் தற்காலிக செய்முறை-காட்டுநர் —

1993-12-31 ஆம் திகதி வரை ரூபா 3,737.50 (நிலையானது) மாதமொன்றுக்கு

1994 - 01 - 01 இல் இருந்து ரூபா 4,225/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக போதனாசிரியர் - ரூபா 3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு ஆயினும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பணிப்புரை கிடைக்கும்வரை ரூபா 3,540/- (நிலையானது) மாதமொன்றுக்கு, கொடுப்பனவு செய்யப்படும்.

இடைவரவு விரிவுரையாளர் இடைவரவு போதனாசிரியர்-

மணித்தியாலத்திற்கு ரூபா 150/-

மணித்தியாலத்திற்கு ரூபா 75/-

குறிப்பு:

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1992 டிசம்பர் 28ஆம் திகதி சுற்று நிருபத்திற்கு ஏற்ப ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 1 பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் 1994 [illegible] யில் இருந்து நடைமுறையாகச் செயற்படுத்தப்படும்.
2. இத்துடன் 1993 டிசம்பர் 31ஆம்திகதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம், நிரந்தர, தற்காலிக பணியாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.
3. 9/93 ஆம் இலக்க 1993 - 05 - 12/பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி மாதாந்த படியாக ரூபா 600/- கொடுப்பனவு செய்யப்படும்.

ஆங்கில போதனாசிரியர் தரம் 11க்கான விண்ணப்ப முடிவுதிகதி 1993-09-17ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுதிகதி 1993-09-10.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக்கிளை, அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1 - ரூபா முத்திரையொட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணபிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆங்கில போதனாசிரியர் தரம் 11 பதவிக்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 - 08 - 09.

(சி-5579)

# மட்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ் குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்படும் பாரிய விறகுப் பிரச்சினைகளை சமாளிக்குமுகமாக யாழ் குடாநாடெங்கும் பரவலாகவும், விரைவாகவும் இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனவே இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள மட்கல உற்பத்தியாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சக்திப் பகுதி,
கூ. பொ. மே. கழகம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(சி-5580)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 20 — 03 — 1929 | 07 — 08 — 1988 |

## திருமதி தவமணி அப்பையா

திதி: 12 — 08 — 1993

அம்மா! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 1, புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (26874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 - 08 - 1993

# உதயன்

## சீற்றத்தின் பின்னால் சுயரூபம்!

விடுதலைப் புலிகள் மணலாற்றில் நடத்திய வெற்றிகரத் தாக்குதல் தெற்கில் இராணுவ வட்டாரங்களில் மட்டுமன்றி அரசியல் வட்டாரங்களிலும் பெரும் அதிர்ச்சியையும், மனக்கொதிப்பையும் உண்டாக்கி இருக்கிறது.

அரசு எதிரணி என்ற வேறுபாடின்றி அரசியல் தலைவர்களும், தென்னிலங்கைப் பத்திரிகைகளும் தோல்வியை சகித்துக் கொள்ளமுடியாமல் தாங்கமுடியாமல் மனம்வேகின்றனர்.

ஜனாதிபதி விஜேதுங்காவும் தமது மனவேக்காட்டை படைத் தளபதிகளுடன் நடத்திய ஒன்றரை மணி நேர மாநாட்டில் பிரதிபலித்திருக்கிறார். இந்தளவு பெரிய தோல்வி இராணுவத்தின் ஆற்றாமையை தெளிவாகக் காட்டுகின்றது என்பதை உணர்ந்தவராக படைத் தளபதிகள் மீது சீறிப் பாய்ந்திருக்கிறார். ''ஒழுங்காகக் கடமைகளைச் செய்யுங்கள் அல்லது விளைவுகளை எதிர் நோக்குங்கள்'' என்று தமது அதிகாரத் தனத்தைக் காட்டித் தளபதிகளை எச்சரித்திருக்கிறார்!

ஜனாதிபதியே முப்படைகளினதும் பிரதம தளபதி பிரேமதாசா தமது பதவிக் காலம் முழுவதும் படைத் தளபதிகளையும், ஏனைய உயர் அதிகாரிகளையும் தமது பக்கத்தில் அரவணைத்து அவர்களைக் கொண்டு இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து வந்தார். ஆனால் விஜேதுங்கா தளபதிகள் மீது சினந்து, சீற்றம் கொண்டு எச்சரிக்கும் அளவுக்குச் சென்றிருக்கிறார்! மூன்று மாத இளம் கன்று பயமறியாது என்பதாலோ ?!

எவ்வாறாயினும், அவரது சீற்றம் அவரது சுயரூபத்தை வெளிக்காட்டி நிற்கிறது அவர் வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்த விரும்பியதில்லை. அதனைத் தொடரவே விரும்பியிருக்கிறார். தமது பதவிக் காலம் முடியும் வரை யுத்தத்தைத் தொடர்வதன் மூலம் எவ்வித இடையூறுமின்றி அதனைத் தக்க வைத்துக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்.

அதனாலேயே இராணுவத்துக்கு ஏற்பட்ட தோல்வியைத் தாங்க முடியாதவராக, செய்வதறியாதவராக, உணர்ச்சி வசப்பட்டவராக சீற்றம் கொண்டிருக்கிறார். தமது பதவிக் காலத்தை முழுதாக அனுபவிக்க வடக்கு - கிழக்கு யுத்தத்தையும், இராணுவத்தையும் நம்பியிருக்க, இப்படி ஒரு தோல்வி வரலாமா என்று மனம் அவிந்து தவிக்கிறார்!

யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் வழமை. தோல்வி நிரந்தரமானது அல்ல என்று படைத்தளபதிகள், உயர் அதிகாரிகள் விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற மனப் போக்குடன் நிலைமையை சமாளித்தாலும், விஜேதுங்காவால் சுதாகரிக்க முடியவில்லை.

யுத்தத்தைத் தொடரும் உள்நோக்குடன் செயற்படும் அவர், சமாதானத்தை, பேச்சுவார்த்தையை விரும்புவார் என்று எதிர்பார்ப்பது எப்படி?

அதிகார ருசியும், பதவி ஆசையும் அரசியல்வாதிகளில் யாரைத்தான் விட்டு வைத்தன? அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராக தாமே நிற்பதற்கு அவர் உள்ளூரத் திட்டமிட்டுமிருக்கலாம் யார் கண்டார்? அது வரை இனப்பிரச்சினை விவகாரத்தை தொடாமல், வடக்கு-கிழக்கில் யுத்தத்தை தொடர்ந்து கொண்டிருப்பின் அதுவே போதும் என்று எண்ணுகிறார் அதனாலேயே யுத்தத்துக்குக் குந்தகமான எதனையும் பொறுக்க முடியாமல் சினக்கிறார்! சீறுகிறார்!

---

கப்பலில் ஏற்றுவதற்காக துறைமுகத்துக்கு அனுப்பப்பட்ட

# வடபகுதிக்கான தேங்காய் எண்ணெய்

# புறக்கோட்டை வர்த்தகருக்கு விற்பனை!

## ரூ. 10கோடி மோசடி குறித்து விசாரணை

கொழும்பு, ஆக. 12

யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் அனுப்புவதற்காக அனுமதிக்கப்பட்ட 60 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் கொழும்பு புறக்கோட்டையில் உள்ள தனியார் வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்ட மோசடி தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட தகவலை புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் அனுப்புவதற்காக புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் அனுமதிக்கப்பட்ட 60 மெற்றித் தொன் தேங்காய் எண்ணெய் உட்பட பெருந் தொகையான உணவுப் பொருள்கள் கப்பலில் ஏற்றப் படாமல் புறக்கோட்டையில் உள்ள தனியார் வர்த்தகருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் —

இந்தப் பொருள்களை கப்பலுக்கு அனுப்புவதற்கு உத்தரவு வழங்கப்பட்ட மூவருக்கு அதற்கான கோடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்றப்படும் பொருள்களின் பட்டியலில் உள்ள பொருள்கள் வடக்கே சென்றடையாமை குறித்து கிடைத்த புகாரையடுத்து இரகசியப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இந்த விவரங்கள் தெரியவந்துள்ளன.

இவ்வாறு கொழும்பில் கையாடப்பட்டதாகக் கூறப்படும் பொருள்களின் மொத்தப் பெறுமதி 10 கோடி ரூபாவுக்கு மேல் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதிக்கு அனுப்பப் படாமல், அனுப்பப்பட்டதாகக்கூறி முழுப்பணத்தையுமே தனியார் விநியோகஸ்தர்கள் பெற்றுள்ள சம்பவங்களை கணக்குப் பரிசோதகர்கள் கண்டுபிடித்துள்ளனர் என்றும் —

வடபகுதிக்கான உணவுப் பொருள்கள் கொழும்புத் துறைமுகத்துக்கே கொண்டு வரப்படாமல் இடைவழியில் கைமாறிப் போயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் —

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஆணையாளர் புத்தி சிறிவர்த்தனாவின் வேண்டுகோளின் பேரில் இரகசியப் பொலிஸ் மா அதிபர் அமரசேனா ராஜபக்ஷ இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

(இ-எ-3)

---

## குடும்பஅட்டையில் மாற்றம் செய்ய விண்ணப்பிப்போர் கவனத்துக்கு

தமது குடும்ப பதிவு அட்டையில் புதிய பிறப்பு, இறப்பு பதிவுகளில் திருத்தம் போன்ற மாற்றங்களை செய்வதற்கும், புதிய பிரதி அட்டை பெறுவதற்கும், விண்ணப்பிப்போர் தங்கள் பகுதி கிராம உத்தியோகத்தரிடம் குடும்ப பதிவு அட்டை விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதனை பூரணப் படுத்தி குடும்ப பதிவு அட்டையுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என்றும்—

அத்துடன் விண்ணப்பப்படிவங்கள் இணைக்கப்படாத குடும்ப பதிவு அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் குடும்ப அட்டை பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

(இ-162)

---

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஞானபண்டித ஆய்வரசு கதிர்தணிகாசலத்தின் பண்ணிசை இடம் பெறும்.

---

## தரம் 2 கணக்காய்வுப் பரீட்சகர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஆக. 12

கணக்காய்வாளர் திணைக்களத்தினால் கணக்காய்வுப் பரீட்சகர் சேவை தரம் இரண்டு பதவிக்கு நியமனம் செய்வதற்காக மட்டுப்படுத்தப்படாத போட்டிப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான பரீட்சை எதிர் வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குரிய கட்டணம் 200 ரூபாவாகும்.

எனினும் அரசாங்க உள்ளூராட்சி சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் 100ரூபா மட்டும் செலுத்தி இதற்கு விண்ணப்பிக்கலாம்.

செப்டம்பர் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மூழு விவரங்களும் 22-07-1993 வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது

(இ-117-160)

---

## அகதிகளை இன்று முதல் மீண்டும் திருப்பி அனுப்புவதற்கு ஏற்பாடு

சென்னை, ஆக. 12

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பி வைக்கும் பணியை பதுமாத கால இடைவெளியின் பின்னர் தமிழக அரசு இன்று வியாழன் மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இன்று ஆயிரத்து 150 இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

நான்கு நாட்களுக்கு ஒரு தடவை அகதிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தமிழக மறுவாழ்வு சிறப்பு ஆணையாளர் சி.எம். இராம்தாஸ் செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார்.

(இ-எ)

---

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் தெய்வீக இசை அரங்கில் திரு. என். பத்மலிங்கம் இன்னிசை மாலை 6 மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15 — 6-15 'பீஸ்மர் வீழ்ந்தார்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீனகுருமூர்த்த மண்டபத்தில்—

பிற்பகல் 2 — 3 மணி வரை ''கொடியைப் புனைந்த குண பூதரனே'' எனும் பொருளில் திரு. சிவ. மகாலிங்கம் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''மூல காரணமாய் நின்ற மூர்த்தி'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(இ-111-126)

---

## எங்களைக் காப்பாற்றுங்கள்...

[6 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாக ஆடிக் கொண்டிருந்தது.

அவ்வேளையில் அப்படகில் இருந்தபயணிகள், ''எங்களை காப்பாற்றுங்கோ! எங்களைக் காப்பாற்றுங்கோ !'' என அழுது குளறி அவலக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

### சிலரை மீட்டோம்

பலத்த கஷ்டத்தின் மத்தியிலும் எமது படகு கடலில்தத்தளித்துக் கொண்டிருந்த படகுக்கு அருகில் சென்றது எமது ஓட்டி கயிறு ஒன்றை தத்தளித்த படகு மீது வீசி அதன் மூலம் அப்படகில் உள்ள பயணிகளில் சிலரை எமதுபடகில் ஏற்றினார்.

அப்பயணிகள் ஏறியதும் எமது படகு பயணத்தை தொடராது திரும்பிச் சிளாலி நோக்கி வந்து கரை சேர்ந்தது. நாம் கரை சேரும்போது இரவு 10 . 30 மணிக்கு மேலாகிவிட்டது.

நாம் கரையில் இறங்கிய பின்னர்தான் தத்தளித்த படகில் பயணம் செய்த பயணிகளில் சிலரைக் காணாதது தெரிவந்தது — எனத்தெரிவித்தார்.

(அ - 173)

---

## 15 சடலங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரிகள்.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி (வயது 38 அவரது மனைவி மனோராணி (வயது 36), பிள்ளைகளான துஷீபா (வயது 7, துவேகா (வயது ஒன்றரை) துளசி (வயது ஒன்றரை).

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் இராஜேஸ்வரி (வயது 56) அவரது மகள் பா.தயானந்தி (வயது 25).

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தர்மலிங்கம் கணேசலிங்கம் (வயது 55), பாலசுப் பிரமணியம் மேகவர்ணன் (வயது 47), நடனசிகாமணி இரத்தினேஸ்வரி வயது 60).

யாழ்ப்பாணம் மடம் வீதியைச் சேர்ந்த ஐயன் மோதிலால் நேரு (வயது 30 , அவரது மனைவி தேவி (வயது 25). இவர்களது ஒரு வயது ஆண் குழந்தை கடலில் காணாமற் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படகில் பயணம் செய்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வி இளவேணி அதிரூபசிங்கம் என்பவரின் கதி இதுவரை தெரியவில்லை.

(இ-173-1/5-157)

---



## ஈழம் மலர்விக்க வா!

எடுப்பு

சேவற் கொடி ஏந்தி ஆடும் மயில் ஏறி
மாதர் புடை சூழ வா - நல்லூ - ரா!
ஆவல் நிறை வேற வா
(சேவற்)

தொடுப்பு

வேலும் முக மாறும் வேற்கை ஈராறும்
சேரும் பலம் சேர்க்க வா - கடம்பா - எந்
நாளும் எமைக் காக்க வா
(சேவற்)

முடிப்பு

சோர்வும் துயர் வாழும் துட்டர் பகை யாவும்
கூறு படச் செய்ய வா - குமரா - எழும்
வீரம் விளை விக்க வா
ஆர்வம் மிக வுண்டு ஆன்ம பலம் உண்டு
அவற்றை அணி செய்ய வா - முருகா - தமிழ்
ஈழம் மலர் விக்க வா!
(சேவற்)

— முருகனடியான்.

---

**தமிழீழமெங்கும் தரிசின்றி பயிர் செய்வோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவகடாட்சம் சபாநடேசன்

[தபால் ஊழியர்]

காரைநகர் இராசாந்தோட்டத்தைப் பிறப்பிடமாக வும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபா நடேசன் அவர்கள் அகால மரணம் அடைந்துவிட்டார். அன்னார் பராசத்தியின் அன்புக் கணவரும், யசிந்தா, யசிகரன், யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமலிங்கத்தின் மூத்த மருமகனுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று அராலியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக் கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. பராசத்தி
[மனைவி]

கற்குழி றோட்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [26917]

## சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி
## திருமதி மகேஸ்வரமூர்த்தி மனோராணி
## செல்வி மகேஸ்வரமூர்த்தி துசிபா
## செல்வி மகேஸ்வரமூர்த்தி துளசி
## செல்வி மகேஸ்வரமூர்த்தி துவேதா

சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் S. S. ரெக்ஸ்ரைல் 214, கொழும்பு உரிமையாளரும், ஆகிய திரு. சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி அவ ருடைய மனைவி திருமதி மகேஸ்வரமூர்த்தி மனோ ராணி (பெற்றி), இவருடைய பிள்ளைகள் துசிபா, துளசி, துவேதா ஆகியோர் 10-8-1993 அன்று கிளாலி படகு விபத்தில் அகால மரணமடைந்துள்ளனர். திருமதி மனோராணி மகேஸ்வரமூர்த்தி இளைப்பாறிய ஆசிரியரான திரு. திருமதி சி. வி. பொன்னையாவின் அருமை மகளும் ஆவார்.

இவர்களது இறுதிக் கிரியைகள் இன்று (12-08-1993) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. பலேந்திரன்
(மைத்துனர்)

மிட்லண்ட் வீடியோ,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(26915)

## இளையதம்பி இராசரத்தினம்
(மலையன்)

(கட்டுடை சைவ வித்தியாலய இளைப்பாறிய அதிபர்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசரத்தினம் (இளைப்பாறிய அதிபர்) 11-08-1993 புதன்கிழமை கொழும்பில் காலமானார். இவர் காலஞ் சென்ற வேலாயுதர் இளையதம்பி—பாக்கியலட்சுமி தம் பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகநாதர் தம்பதிகளின் மருமகனும், சுதுமலை சின்மய வித்தியா லய ஆசிரியை ஜெகசோதியின் கணவரும், அறிவழகன் (பொறியியலாளர் - கனடா), அன்பழகன் (கணக்காளர் லண்டன்), டாக்டர் மதியழகன் (கொழும்பு பெரியாஸ் பத்திரி), நிர்மலா, கலையழகன் (லண்டன்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், நாகராசா (இளைப்பாறிய அதிபர் - லண்டன்), விஜயரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), நவரத்தினம், பஞ்சரத்தினம், தவமணிதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அப்பாத் துரையும் அவரின் சகோதரிகளினதும், மைத்துனரும், டாக்டர் ஆனந்தசிவம் (வவுனியா அரசினர் வைத்திய சாலை), கலாநிதி (கனடா), சுமதி (லண்டன்) டாக் டர் தயாநிதி (கொழும்பு பெரிய ஆஸ்பத்திரி) ஆகியோ ரின் மாமனாரும் ஆவார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று 12-8-1993 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
இ. விஜயரத்தினம்
(சகோதரன்)

71, அரசடி வீதி,
9A தேவகுமார் வீதி,
யாழ்ப்பாணம். [26918]

## அப்பாத்துரை சிவஞானம்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அப்பாத்துரை சிவ ஞானம் சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை, கண்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், இந்திரனின் (சிங்கப் பூர்) அருமைத் தந்தையும், சொன்சியின் (சிங்கப்பூர்) மாமனாரும், சாளினியின் (சிங்கப்பூர்) பேரனும், மனோரஞ்சிதம், முருகையா, தனலட்சுமி, சண்முகலிங் கம், தங்கலட்சுமி, குமாரவேல், பாலபாஸ்கரன், இரா சேஸ்வரி, ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சதாசிவம், ஞானம்மா, நவரத்தினம், சங்கரலிங்கம், திருமகள், சுமதி, பாக்கியநாதன் ஆகியோரின் மைத் துனருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 10-8-93 இல் சிங் கப்பூரில் நடைபெற்றன உற்றார், உறவினர், நண்பர் கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. குமாரவேல்
(சகோதரன்)

பொன்னையா, லேன்,
ஆனைக்கோட்டை, (26913)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமி டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத் திலுள்ள அச்சகத்தில் 12-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

தத்தளித்த படகிலிருந்தவர்கள்

# எங்களைக் காப்பாற்றுங்கோ என்று அவலக்குரல் எழுப்பினர்

## பொதிகள் படகில் சென்றவர் விவரிப்பு

வடமராட்சி, ஆக. 12

நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த படகு ஒன்றி லிருந்து எங்களைக் காப்பாற் றுங்கோ எங்களைக் காப்பாற் றுங்கோ என்று பயணிகள் கூக்குரலிட்டனர்.

அவலக் குரல் கேட்டதும் எமது படகோட்டி எங்கள் படகை தத்தளித்த படகுக்கு அருகே கொண்டு சென்று சிலரை மீட்டு, எங்கள் பட கில் ஏற்றினார்.

விபத்துக்குள்ளான படகு ஒன்றில் இருந்து பயணிகளை மீட்டு ஏற்றிக் கிளாலிக்குத் திரும்பி வந்து சேர்ந்த பொதி கள் ஏற்றும் படகு ஒன்றில் பயணம் செய்த பெண்மணி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெல்லியடி முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி முருகேசு (50 வயது) என்ற பிரஸ்தாப பெண்மணி மேலும் தெரிவித் ததாவது:-

கொழும்பு செல்வதற்காக நேற்று முன்தினமிரவு சுமார் 7.30 மணியளவில் நானும் இன்னும் இருவருமாக புகை யிலைச் சிப்பம் ஏற்றிச் சென்ற படகு ஒன்றில் பயணத்தை மேற்கொண்டோம். நாம் பயணம் செய்த படகுதான் இங்கிருந்து சென்ற கடைசிப் படகு ஆகும்.

கடலில் சிறிது தூரம் சென்றதும் எமது படகு அங் கும் இங்குமாக வேகமாக ஆடியது. கடல் தண்ணீர் எம் மீது அடிக்கத் தொடங்கியது கடுமையான காற்றும் வீசிக் கொண்டிருந்தது. படகு அங் கும் இங்குமாக ஆடியபோது எங்களுக்கு ஆபத்து ஏற்பட லாம் என்று நினைத்து "அப் பனே முருகா!" என முருகப் பெருமானை வேண்டிக் கொண்டிருந்தோம்.

### பயணிகள் படகும் தத்தளித்தது

இதேநேரம் எமது படகுக்கு சற்றுத் தூரத்தில் பயணிகளு டன் படகு ஒன்று நடுக்கட லில் தத்தளித்துக் கொண்டி ருந்தது. கடுமையான காற் றும் வீசியதால் அந்தப் படகு மிக வேகமாக மிகப் பயங்கர

[5ஆம் பக்கம் பார்க்க]

### கடலுக்குள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கியநிலையில் இருந்தார்.

இவ்வாறு தமது மரண அனுபவத்தின் அவஸ்தையை விவரித்தார். இரண்டாவது படகில் பயணம் செய்து கட லில் மூழ்கித் தப்பிய குல சேகரம்பிள்ளை யோகேந் திராதேவி (27 வயது)

படகு கவிழ்ந்த போது தாம் பிடித்துக் கொண்ட உறவினர் கோண்டாவிலைச் சேர்ந்த நாகையா நடராசா (60 வயது) எனத் தெரிவித்த யோகேந்திராதேவி மேலும் கூறியதாவது:-

நான் பயணம் செய்தபடகு இரவு சுமார் 7.35 மணியள வில் கிளாலிக் கரையில் இருந்து புறப்பட்டது. அந்தப் படகில் 18 பேர் இருந்தோம்.

சுமார் 9 மணியளவில் படகு நடுக்கடலை அண்மித்துக் கொண்டிருந்த வேளை கடுங் காற்றும் கடல்கொந்தளிப்பும் வேகமாகின, அதிகரித்தன. கடல் நீர்படகிற்குள் நிறைந்து கொண்டிருந்தது. படகோட் டிகள் சிறிய பாத்திரம் ஒன்றி னால் தண்ணீரை வெளியே ஊற்றிக் கொண்டிருந்தனர். அப்போது அந்தப்பாத்திரமும் கைதவறிக் கடலில் விழுந்தது.

நாங்கள் 'சொப்பிங் பாக்' "யூரியா பாக்" ஆகியவற்றி னால் தண்ணீரை அள்ளி வெளியேற்ற முயற்சித்தோம். ஆனால் நிறைந்து கொண்டே இருந்தது. சில நிமிடநேரத் தில் படகு கவிழ்ந்தது நாமும் கடலுக்குள் வீழ்ந்தோம். கடல் அலைகள் எங்களை அலைக்கழித்துக் கொண்டிருந் தன.

எங்களுக்கு அருகில் வந்த படகில் வந்தவர்கள் எங்கள் இருவரையும் தூக்கி எடுத்தது போலவே மற்றும் பலரையும் மீட்டு வந்தனர் — என்று சொன்னார். (அ-15)

### கிளாலிக் கடலில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய படகு சுமார் 9-00 மணி அளவில் நீரில் மூழ்கியது. இப்படகில் இருந் தவர் வில் தாயும் மகளுமான இருவர் தவிர ஏனையோர் உயிர் தப்பினர்.

இந்த விபத்தில் உயிர் தப்பி கடலில் தத்தளித்தவர்கள் கடல் புலிகளினாலும் மற்றும் படகுகளின் ஓட்டிகளினாலும் மீட்கப்பட்டு பாதுகாப்பாக கிளாலிக் கரைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

(இ-117-168-15-9-5)

# தசாக அழைப்பு

பேரன்புடையீர்!!

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆடி மாதம் 20 ஆம் நாள் (04—08—1993) புதன்கிழமை இறைபதம் சேர்ந்த,

எமது அன்புத்தந்தை

## சிவஸ்ரீ சி. வரதராஜக்குருக்கள்

அவர்களின்

அந்திமக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

ஆடி 29 (13-08-93) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் தசாகக்கிரியைகள்
ஆடி 30 (14-08-93) சனிக்கிழமை பகல் ஏகோதிஷ்டம், மாசிகம்
ஆடி 31 (15-08-93) ஞாயிற்றுக்கிழமை பகல் சபிண்டீ கரணம்
ஆடி 32 (16-08-93) திங்கட்கிழமை பகல் கிருஹயக்ஞம்

இங்ஙனம்
பிள்ளைகள்

விசவத்தனை,
பண்ணாகம்.
(26911)

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லம்மா விஸ்வநாதன்
(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கொக்குவிலில் வசித்த திருமதி நல்லம்மா விஸ்வநாதன் 10-08-93 அன்று அகால மரணமானார்.

இவர் நீர்கொழும்பு பியூட்டிஹவுஸ்/ முகுந்தாஸ் முன்னாள் வர்த்தகர் விஸ்வநாதனின் அன்பு மனை வியும், கஜமுகன் (சுவிஸ்), முகுந்தன் (நோர்வே), ரமணன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கிரியாசக்தியின் (சுவிஸ்) அன்பு மாமியாரும், குரும்ப சிட்டி திரு. தம்பிநாதரின் அன்பு மகளும், குரும்ப சிட்டியைச் சேர்ந்த செல்லத்துரை (முன்னாள் நீர் கொழும்பு வர்த்தகர் பியூட்டிஹவுஸ்) வேலாயுதபிள்ளை [முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர் பியூட்டிஹவுஸ்], புலேந்திரன் [முன்னாள் விட்டன்/ டென்மார்க்], புவ னேந்திரன் [முன்னாள் பாட்டா / ஜேர்மனி) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இல 38, சம்பியன் வீதி, கொக்குவில் இல்லத்தில் இன்று 12-08-93 பிற்பகல் 3. மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

தகவல்:
சி. தயாபரன்

(26916)

# OBITUARY

## MISS. LYDIA SELVAMALAR THAMBIRAJAH

Miss Lydia Selvamalar Thambirajah (retried teacher, St. John's College, Jaffna), daughter of late Mr. Thambiah Thambi rajah and late mother Gnanamany and cousin of Mr. Sam Mann of uduvil and late Dr. David Jesudason Mann entered glory on 11th August. Funeral Service at 63, Groussault road, Chundikuli today 12th Thursday at 3.00 p.m. Burial Ceylon Pentecostal mission Cemetery, Vasanthapuram.

Informant
SAM MANN

(26914)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org